# <u>தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செய்திக்குறிப்பு</u>

## <u>மாவட்ட அளவிலான மாற்றுதிறனாளிகள் விளையாட்டுப் போட்டிகள் 2019–2020</u>

விளையாட்டுத்துறையில் மாற்றுதிறனாளிகளை ஊக்குவிக்கும் வகையில், தஞ்சாவூர் மாவட்ட அளவில் மாற்றுதிறனாளிகளுக்கான தடகளம் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகள் அன்னை சத்யா விளையாட்டரங்கில் வருகின்ற 25.02.2020 அன்று காலை 9.00 மணியளவில் நடைபெற உள்ளது. இப்போட்டியில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுதிறனாளிகள் அனைவரும் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிகொணர கேட்டுக்கொள்ளப்படுகின்றது. இப்போட்டிகளில் பங்கேற்க வயது வரம்பு கிடையாது. குறிப்பிட்ட பிரிவில் விளையாட கலந்துகொள்பவர்கள் ஒருவர் ஒரு விளையாட்டில் மட்டுமே கலந்துகொள்ள முடியும்.

**தடகள போட்டிகள் – கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு** 50மீ. ஓட்டப் போட்டி கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும், 100மீ. ஓட்டப் போட்டி கை பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும், 50மீ. ஓட்டப் போட்டி குள்ளமானோருக்கும், குண்டு எறிதல் போட்டி கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும், 100 மீ. சக்கர நாற்காலி போட்டி இருகால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நடைபெறவுள்ளது.

**பார்வையற்றோர்களுக்கு** 50மீ. ஓட்டப் போட்டி முற்றிலும் பார்வையற்றோருக்கும், 100மீ. ஓட்டப் போட்டி மிக குறைந்த பார்வையற்றோருக்கும், நின்ற நிலை தாண்டுதல் போட்டி மிக குறைந்த பார்வையற்றோருக்கும், குண்டு எறிதல் போட்டி முற்றிலும் பார்வையற்றோருக்கும், Soft ball மிக குறைந்த பார்வையற்றோருக்கும் நடத்தப்படவுள்ளது.

**மன வளர்ச்சி குன்றியோருக்கு** 50மீ. ஓட்டப் போட்டி ஐக்கு தன்மை முற்றிலும் இருக்காதவருக்கும், 100மீ. ஓட்டப் போட்டி ஐக்கு தன்மை நல்ல நிலையில் இருப்பவருக்கும், Soft ball எறிதல் போட்டி ஐக்கு தன்மை முற்றிலும் இருக்காதவருக்கும், நின்ற நிலையில் தாண்டுதல் போட்டி மூளை நரம்பு பாதிக்கப்பட்டவர்களுக்கும் (Cerebral paralysis), குண்டு எறிதல் போட்டி ஐக்கு தன்மை நல்ல நிலையில் இருப்பவருக்கும் நடத்தப்படவுள்ளது.

<u>காது கேளாதோர்களுக்கு</u> 100மீ. ஓட்டம், 200மீ. ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல், 400 மீ ஓட்டம் ஆகியப்போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

**குழு விளையாட்டுப் போட்டிகள் –** கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இறகு பந்து ஒற்றையர் மற்றும் இரட்டையர் ஓர் அணிக்கு 5 வீரர் / வீராங்கனைகளும், மேசைபந்து அணிக்கு 2 வீரர் / வீராங்கனைகளும், பார்வையற்றோருக்கான அடாப்டட் வாலிபால் அணிக்கு 7 வீரர் / வீராங்கனைகளும், மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு எறிபந்து போட்டியும் அணிக்கு 7 வீரர் / வீராங்கனைகளும், காது கேளாதோருக்கு கபாடி போட்டிக்கு அணிக்கு 7 வீரர் / வீராங்கனைகளும் கலந்து கொள்ளலாம்.

மாற்றுத்திறனாளிகளுக்கான தடகளம் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளுக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மாற்றுதிறன் கொண்ட மாணவ, மாணவியர்கள் அதிக அளவில் கலந்துகொண்டு தங்கள் விளையாட்டு திறனை வெளிபடுத்திட கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குறிப்பு: **மேற்படி போட்டிகளில் கலந்து கொள்வதற்கு அரசு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் வழங்கப்பட்ட மருத்தவச் சான்று / மாவட்ட மாற்றுதிறன் நல அலுவலரால் வழங்கப்பட்ட சான்று அவசியம் கொண்டு வருதல் வேண்டும்.**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தஞ்சாவூர்.